## சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை – "கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம்" அமைத்தல் மற்றும் தமிழ்நாடு மாநில சமூக நல வாரியத்தின் செயல்பாடுகளை கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்துடன் இணைத்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் [சந 3(2)] துறை

அரசாணை (நிலை) எண்.56

நாள் 02.09.2022

சுபகிருது, ஆவணி 17.

திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டவை:

1. சமூக நல இயக்குநரின் கடித ந.எண்.13554/ ம.ந.1(1)/ 2021, நாள் 05.10.2021 மற்றும் 12.10.2021.
2. ஒன்றிய அரசு, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கடித எண். CSWB–016/32/2021–CSWB நாள் 28.04.2022.

---

ஆணை:

மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் – மகளிர் உரிமை) அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 01.09.2021 அன்று பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது:–

"தமிழ்நாட்டிலுள்ள கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள், முதிர்கன்னிகள் உள்ளிட்டோர் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளை களைந்து அவர்கள் வாழ்வதற்குரிய வசதிகளான கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, சுய உதவிக் குழுக்கள் அமைப்பது, தொழிற்பயிற்சிகள் வழங்குதல் போன்ற தேவையான திட்டங்களை வகுத்து, சமூகத்தில் பாதுகாப்புடன் சிறப்பான முறையில் வாழ்வதற்காக "கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம்" அமைக்கப்படும்".

(த.பி.பா)

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட சமூக நல இயக்குநரது கருத்துருவில் திருநங்கைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள நல வாரியம் போன்று தமிழ்நாட்டிலுள்ள கைம்பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள் ஆகியோருக்கு சமூகப் பாதுகாப்பை அளிப்பதற்காக கல்வி, வேலைவாய்ப்பு, சுய உதவிக் குழுக்கள் அமைப்பது, தொழிற்திறன் பயிற்சிகள் அளித்தல், நிலையான வருமானம் ஈட்டி பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுதல் மற்றும் சமூக பாதுகாப்பிற்கு தேவையான திட்டங்களை வகுத்து சிறப்பான முறையில் செயல்படுத்துவதை நோக்கமாக கொண்டு கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் ஒன்றை மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை அமைச்சர் அவர்களை தலைவராகவும், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பல்வேறு துறைகளின் பிரதிநிதிகளை அலுவல்சார் உறுப்பினர்களாகவும், கைம்பெண்கள், கல்வியாளர்கள், பெண் தொழில் முனைவோர்கள், பெண் விருதாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவன பெண் பிரதிநிதிகள் ஆகியோரை அலுவல் சாரா உறுப்பினர்களாகவும் நியமிப்பதற்கு அனுமதியை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். நியமனம் செய்யப்படும் அலுவல்சாரா உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகள் ஆகும் என்றும் கைம்பெண்கள் மகளிர் நல வாரியத்திற்கான அலுவல்சாரா உறுப்பினர்களை தெரிவு செய்யும் அதிகாரத்தை சமூக நல இயக்குநருக்கு வழங்குமாறும், சமுதாயத்தில் கைம்பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக சிறப்பு கவனம் செலுத்தி பல்வேறு நலத் திட்டங்களை தீட்டி, செயல்படுத்துவதற்காக பணியிடங்களுடன் கூடிய தனிப்பிரிவு ஏற்படுத்துவது மிகவும் அவசியம் என்று குறிப்பிட்டு வாரியத்திற்காக ஏற்படுத்தப்படும் பணியிடங்கள், வாரியத்திற்கான இலவச கட்டிடம் கண்டறியப்படும் வரை வாடகையில் இயங்கும் வகையில் அலுவலகம், வாரியத்தின் நிர்வாகப் பணிகள், நலத்திட்டப் பணிகள் மற்றும் இதர பணிக்கான செலவினங்களை மேற்கொள்ளும் பொருட்டு ஆதார நிதியாக ரூ.10.59 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வழங்குமாறு சமூக நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஒன்றிய அரசு, நிதித்துறையின் பரிந்துரையின்படி மைய சமூக நல வாரியத்தை மூடுவதற்கு ஒப்புதலளித்துள்ளதால் ஒன்றிய அரசின் ஒப்புதலுடன் 1954-ம் ஆண்டு துவக்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியத்திற்கு நிதி, நிர்வாகம், சேவை மற்றும் எவ்விதமான நிதியுதவியும் வழங்கப்படமாட்டாது என்று ஒன்றிய அரசு தெரிவித்துள்ளதுடன், மாநில சமூக நல வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களை நடப்பில் உள்ள ஒன்றிய அரசின் திட்டங்கள் அல்லது மாநில அரசின் திட்டங்களின் கீழ் ஈர்த்துக் கொள்வதற்கு பரிசீலிக்குமாறு மாநிலங்களை கேட்டுக் கொண்டுள்ளது.

4. 17.02.2022 அன்று தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஏனையவற்றுள், கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் உருவாக்குவதற்கான கருத்துருவில் மாநில சமூக நல வாரியத்தின் செயல்பாடுகளை இணைக்கும் வகையில் பரிசீலிக்கலாம் என்று கருதப்பட்டது. இதன் அடிப்படையில் புதியதாக உருவாக்கப்படும் கைம்பெண்கள் நல வாரியத்துடன் தமிழ்நாடு மாநில சமூக நல வாரியத்தின் தற்போதைய செயல்பாடுகளை அதற்கான பணியிடங்களுடன் இணைப்பதற்கும் மாநில சமூக நல வாரியத்திற்கென ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களையே உத்தேசிக்கப்பட்டுள்ள கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்திற்கு பயன்படுத்தும் வகையில் பணியிடங்களை தோற்றுவிக்கவும் கூடுதலாக ஒரு இணை இயக்குநர் பணியிடத்தை தோற்றுவிக்கவும் முடிவெடுக்கப்பட்டது.

5. சமூக நல இயக்குநரின் கருத்துருவை நன்கு பரிசீலித்தப் பின்னர், அரசு, பின்வரும் ஆணைகளை வெளியிடுகிறது.

(i) தமிழ்நாட்டிலுள்ள கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள், முதிர்கன்னிகள் உள்ளிட்டோர் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை களைந்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வசதிகளான கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, சிறப்பு சுய உதவிக் குழுக்கள் அமைப்பது, தொழிற்பயிற்சிகள் வழங்குதல் போன்ற தேவையான திட்டங்களை வகுத்து, சமூகத்தில் அவர்கள் பாதுகாப்புடன் கண்ணியமான முறையில் வாழ்வதற்காக "கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம்" ஒன்று உருவாக்கப்படுகிறது.

(ii) கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டமாக, இணைப்பில் குறிப்பிட்டுள்ள விரிவான நெறிமுறைகளின்படி செயல்படுத்துவதற்கு சமூக நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(iii) கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் பின்வருமாறு அமைக்கப்படுகிறது.

<u>அலுவல்சார் உறுப்பினர்கள்</u>

| | | |
|---|---|---|
| 1. | மாண்புமிகு அமைச்சர்,<br>சமூக நலன் – மகளிர் உரிமை. | தலைவர் |
| 2. | கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை | உறுப்பினர் |
| 3. | மருத்துவர் கனிமொழி என்.வி.என் சோமு,<br>நாடாளுமன்ற உறுப்பினர் | உறுப்பினர் |

(த.பி.பா)

| | | |
|---|---|---|
| 4. | திருமதி. ம. வரலட்சுமி,<br>சட்டமன்ற உறுப்பினர் | உறுப்பினர் |
| 5. | கூடுதல் தலைமைச் / முதன்மைச் / செயலாளர்,<br>நிதித்துறை (அ) அவரது பிரதிநிதி | உறுப்பினர் |
| 6. | காவல் துறை கூடுதல் இயக்குநர்,<br>பெண்கள் (ம) குழந்தைகளுக்கெதிரான குற்றத்தடுப்பு பிரிவு, சென்னை. | உறுப்பினர் |
| 7. | மேலாண்மை இயக்குநர்,<br>தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், சென்னை. | உறுப்பினர் |
| 8. | இயக்குநர்,<br>சமூக பாதுகாப்புத் திட்டம் (SSS), சென்னை. | உறுப்பினர் |
| 9. | மேலாண்மை இயக்குநர்,<br>தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், சென்னை. | உறுப்பினர் |
| 10. | இயக்குநர்,<br>சமூக நலத்துறை, சென்னை. | உறுப்பினர்<br>செயலர் |
| குறிப்பு: வ.எண்.3, 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றும் காலம் வரையாகும். | | |

<u>அலுவல்சாரா உறுப்பினர்கள்</u>

| | |
|---|---|
| 1 | கைம்பெண்கள் பிரதிநிதிகள் - 4 நபர்கள்<br>(பட்டியலினத்தவர்-1, பழங்குடியினர்-1, இதர வகுப்பினர்-2) |
| 2. | பெண் கல்வியாளர்கள் - 2 நபர்கள் |
| 3. | பெண் தொழில் முனைவோர்கள் - 2 நபர்கள் |
| 4. | பெண் விருதாளர்கள் - 2 நபர்கள் |
| 5 | தன்னார்வத் தொண்டு நிறுவன பெண் பிரதிநிதிகள் - 4 நபர்கள் |

(iv) அலுவல் சாரா உறுப்பினர்களை நியமனம் செய்வது தொடர்பாக மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை அமைச்சர் அவர்களை தலைவராகவும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் சமூக நல இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு தேர்வுக் குழு ஒன்று அமைக்கப்படுகிறது.

(v) வாரியத்தின் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களுக்கு, தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தில் வழங்கப்படுவது போன்று அமர்வுக் கட்டணமும், பயணப்படியும் அனுமதிக்கப்படுகிறது.

(vi) இவ்வாரியத்தின் வாயிலாக பயனடைவதற்காக ஆதரவற்ற ஏழைக் கைம்பெண்களையும், முதிர்கன்னிகள் உள்ளிட்ட ஆதரவற்ற பெண்களையும் உறுப்பினர்களாக சேர்ப்பதற்கும், ஏழைக் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் ஆகியோரை இளம் வயது, நடுத்தர வயது, முதிர்வயது என்று வகைப்படுத்தி முன்னுரிமை அளிப்பதற்கும் சமூக நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(vii) கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள், முதிர்கன்னிகள் போன்றவர்கள் நலனுக்காக சிறப்பு கவனம் செலுத்தி கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தின் நலத்திட்ட உதவிகளை செயல்படுத்துவதற்கு பின்வரும் பணியிடங்கள் உருவாக்கப்படுகிறது.

| வ. எண். | பணியிடங்கள் | எண்ணிக்கை | ஊதிய நிலை ரூ. |
|---|---|---|---|
| 1. | இணை இயக்குநர் | 1 | நிலை-26, 61,900 – 2,28,100 |
| 2. | கண்காணிப்பாளர் | 3 | நிலை-18, 36,900 -1,35,100 |
| 3. | சுருக்கெழுத்து தட்டச்சர் | 2 | நிலை-10, 20,600 -75,900 |
| 4. | தட்டச்சர் | 1 | நிலை-8, 19,500 – 71,900 |
| 5. | ஓட்டுநர் | 1 | நிலை-8, 19,500 – 71,900 |
| 6. | அலுவலக உதவியாளர் | 3 | நிலை-1, 15,700 – 58,100 |
| மொத்தம் | | 11 | |

(viii) ஒன்றிய அரசால் எடுக்கப்பட்ட முடிவின்படி தமிழ்நாடு சமூக நல வாரியம் கலைக்கப்படுகிறது.

(ix) உருவாக்கப்படும் புதிய பணியிடங்களில் இணை இயக்குநர் பணியிடம் தவிர்த்து, தமிழ்நாடு சமூக நல வாரியத்தில் தற்போதுள்ள 13 பணியிடங்களில், மூன்று கண்காணிப்பாளர், இரண்டு சுருக்கெழுத்து தட்டச்சர், ஒரு தட்டச்சர், ஓர் ஓட்டுநர், மூன்று அலுவலக உதவியாளர் ஆகிய பத்து பணியிடங்களில் பணியாற்றுபவர்களை தமிழ்நாடு கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்திற்காக உருவாக்கப்பட்டுள்ள புதிய பணியிடங்களில் பயன்படுத்திக் கொள்வதற்கு சமூக நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(x) தமிழ்நாடு சமூக நல வாரியத்தில் மேற்குறிப்பிட்டுள்ள பத்து பணியிடங்கள் போக மீதமுள்ள ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர், ஒரு பதிவுரு எழுத்தர், ஓர் அலுவலக உதவியாளர் ஆகிய மூன்று மிகைப் பணியிடங்களில் தற்போது பணியாற்றுபவர்களை துறையில் உள்ள இதர காலிப் பணியிடங்களில் மறுபகிர்வின் அடிப்படையில் பணியமர்த்துவதற்கு சமூக நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(xi) தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் தற்போதைய செயல்பாடுகள் ஏதேனுமிருப்பின் இனி தமிழ்நாடு கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்துடன் இணைத்து செயல்படுத்துவதற்கு சமூக நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(xii) உருவாக்கப்படும் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்திற்கு, ஆண்டொன்றிற்கான தொடர் செலவினம் ரூ.87,97,512/- மற்றும் தொடராச் செலவினம் ரூ.12,50,000/- ஆக மொத்தம் ரூ.1,00,47,512/-க்கு நிருவாக அனுமதியும் நடப்பாண்டிற்கு ரூ.56,61,256/- (ரூபாய் ஐம்பத்து ஆறு இலட்சத்து அறுபத்தோராயிரத்து இருநூற்று ஐம்பத்து ஆறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

(xiii) கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம், சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்டு வாரியத்தின் நோக்கம், விதிகள், நடவடிக்கைகள் போன்றவை மாவட்ட பதிவாளர் வாயிலாக பதிவு செய்வதற்கு சமூக நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(xiv) சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் பதியப்பெறும் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்திற்கான துணை விதிகளை உருவாக்குவதற்கு சமூக நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(xv) வாரியத்தின் வாயிலாக நலத் திட்டங்களை தீட்டி செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை அரசின் ஆய்விற்கு அனுப்புமாறு சமூக நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(xvi) ஆண்டுதோறும் இந்நலவாரியத்தின் கணக்குகளை பட்டய கணக்காயர் வாயிலாக தணிக்கை செய்து அரசுக்கு அறிக்கையும் வாரியத்தின் செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கையும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு சமூக நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 5 (xii) – ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| 2235-சமூகப் பாதுகாப்பும் நலனும் -02 சமூக நலன் - 103 மகளிர் நலன் - மாநிலச் செலவினங்கள் ME கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் - | நடப்பாண்டு 2022-2023-ல் 6 மாதங்களுக்கான செலவினங்களுக்கு அனுமதிக்கப்படும் (தொகை ரூ. ) | ஆண்டு மொத்தச் செலவினம் (தொகை ரூ.) |
|---|---|---|
| 301-சம்பளங்கள்<br>01-அடிப்படை சம்பளம்<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 30101) | 27,18,000 | 54,36,000 |
| 02-மருத்துவப் படி<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 30102) | 20,000 | 40,000 |

| | | | |
|---|---|---|---|
| 03-மருத்துவ செலவுகள்<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 30103) | | 5,000 | 5,000 |
| 04-ஏனைய படிகள்<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 30104) | | 10,000 | 5,000 |
| 06-வீட்டு வாடகைப் படி<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 30106) | | 22,136 | 44,272 |
| 07-பயணச் சலுகை<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 30107) | | 5,000 | 5,000 |
| 08-நகர ஈட்டுப்படி<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 30108) | | 5,000 | 10,000 |
| 303-அகவிலைப் படி<br>01-அகவிலைப்படி<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 30301) | | 9,24,120 | 18,48,240 |
| 305-அலுவலகச் செலவுகள்<br>01-தொலைபேசிக் கட்டணங்கள்<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 30501) | | 15,000 | 30,000 |
| 02-ஏனைய சில்லறைச் செலவுகள்<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 30502) | | 1,50,000 | 3,00,000 |
| 03-மின் கட்டணங்கள்<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 30503) | | 15,000 | 30,000 |
| 05-அறைகலன்<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 30505) | | 1,40,000 | 1,40,000 |
| 306 - வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01-வாடகை<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 30601) | | 4,50,000 | 9,00,000 |
| 319 - இயந்திரமும் சாதனமும் 01-வாங்குதல்<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 31901) | | 1,00,000 | 1,00,000 |
| 321 - மோட்டார் வண்டிகள் 01-வாங்குதல்<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 32101) | | 8,00,000 | 8,00,000 |
| 345 - பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் 01 - பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய்<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 34501) | | 72,000 | 1,44,000 |
| 376 - கணினியும் துணைப் பாகங்களும் 01- வாங்குதல்<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 37601) | | 2,00,000 | 2,00,000 |
| 381 - வலைப்பின்னல் மற்றும் இணைப்புகள் 01 - வலைப்பின்னல்<br>(IFHRMS DPC - 2235 02 103 ME 38101) | | 10,000 | 10,000 |
| மொத்தம் | | 56,61,256 | 1,00,47,512 |

(த.பி.பா)

7. மேற்குறிப்பிட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பிற்கு சமூக நல இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

8. மேலே பத்தி 5 (xii)-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப் பணி" (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.பொ.I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும் அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித்(வ.செ.பொ.I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு சமூக நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2022-2023 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (வ.செ.பொ.I/சந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு சமூக நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன் அதன் அ.சா.எண்.41111/ நிதி(மை.ம.ஆ.பி)/2022, நாள் 01.09.2022-ன் படி வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1084 (ஆயிரத்து எண்பத்து நான்கு) (IFHRMS ASL No.2022081084) PSL.202208 PSL0271.

// ஆளுநரின் ஆணைப்படி//

ஷம்பு கல்லோலிகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை -15.
கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை, சென்னை - 9.
அனைத்து அலுவல்சார்/அலுவல் சாரா உறுப்பினர்கள்
(சமூக நல இயக்குநர் வழியாக)
சமூகப் பாதுகாப்பு இயக்குநர், சென்னை - 10.
இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்,
சென்னை - 113.

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/
அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்கள்,
(சமூக நல இயக்குநர் வழியாக)
சம்பந்தப்பட்ட சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள்/
கருவூல அலுவலர்கள், (சமூக நல இயக்குநர் வழியாக)
அனைத்து துறைகள், தலைமைச் செயலகம், சென்னை – 9.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை – 18.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனித வள மேலாண்மை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் – மகளிர் உரிமை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும்
மகளிர் உரிமைத் துறை, அவர்களின் நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
நிதி (ச.ந / வ.செ.பொ.I/2, மை.ம.ஆ.பி/வ.வ.I)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
இருப்பிட தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம்,
சென்னை –9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந2) துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் அனைத்து
பிரிவுகள், தலைமைச் செயலகம், சென்னை – 9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஆர். எல். சுபஸ்ரீ 02/09/2022
பிரிவு அலுவலர்.

(த.பி.பா)

## இணைப்பு

## அரசாணை (நிலை) எண்.56 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் [சந3(2)] துறை, நாள் 02.09.2022

## கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் செயல்படுவதற்கான நெறிமுறைகள்

பெயர் :

தமிழ்நாடு கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம்

நோக்கம் :

தமிழ்நாட்டிலுள்ள கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள், முதிர்கன்னிகள் உள்ளிட்டோர் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை களைந்து அவர்கள் வாழ்வதற்குரிய வசதிகளான கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, சுய உதவிக் குழுக்கள் அமைப்பது, தொழிற்பயிற்சிகள் வழங்குதல், சமூகத்தில் பாதுகாப்புடன் சிறப்பான முறையில் வாழ்வதற்கு தேவையான திட்டங்களை வகுத்து செயல்படுத்துதல்.

நோக்கங்களுக்கான செயல்முறைகள் :

- வாரியத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு வாரிய உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்டி தீர்மானிக்கப்படும் தீர்மானங்களை நிறைவேற்றும்
- இவ்வாரியம் "தமிழ்நாடு" முழுவதும் உள்ள கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலனில் அக்கறை காட்டும்.
- கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிருக்கு முழுமையான சமூக பாதுகாப்பை அளிக்க தேவையான திட்டங்களை வகுக்கும்.
- கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிருக்கு கல்வி, திறன் வளர்க்கும் பயிற்சி, சுய தொழில் செய்திட பயிற்சி மற்றும் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர்களின் வாழ்வாதாரத்தை சிறப்புற அமைக்க இன்ன பிற திட்டங்களை தீட்டுவது.
- தமிழ்நாடு மாநில சமூக நல வாரியம் கலைக்கப்பட்டுள்ளதால் அவற்றின் செயல்பாடுகள் ஏதேனுமிருப்பின் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்துடன் இணைத்து செயல்படுத்துதல்.

வாரியத்தில் உறுப்பினராவதற்கான தகுதி:

- 18 வயதுக்கு மேல் உள்ள கைம்பெண்கள், ஆதரவற்ற / நலிவுற்ற பெண்கள் மற்றும் முதிர்கன்னிகள்.

<u>வாரியம் செயல்படுவதற்கான நெறிமுறைகள்:</u>

i. கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு துறைக்குத் தேவையான உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்குதல்.

ii. துறையால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களை ஆராய்ந்து செயல்படுத்துவதற்கு வழி நடத்துதல்.

iii. வாரியத்திற்கென தேவையான கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்துதல்.

iv. இவ்வாரியத்தின் நோக்கங்களை நிறைவேற்ற தீர்மானங்களைத் தீட்டி தன்னிச்சையாகச் செயல்படுத்துதல்.

v. தேவைப்படின் வாரியத்திற்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்களை ஏற்படுத்துதல்.

vi. வாரியத்திற்கு தேவையான நிதியொதுக்கத்தை அரசிடமிருந்து பெற்று வாரியக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் திட்டங்கள் தீட்டி செயல்படுத்துதல்.

vii. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நல வாரியத்திற்கான கூட்டம் கூட்டப்படுதல்.

viii. ஒவ்வொரு கூட்டத்திற்கும் 50 சதவீதம் உறுப்பினர்களின் வருகையை உறுதி செய்தல்.

ix. வாரியத்தால் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் மற்றும் அவசரத் தீர்மானங்கள் செயல்படுத்துவது குறித்து வாரியக் கூட்டத்தில் சமர்ப்பித்து ஒப்புதல் பெறுதல்.

x. அவசரத் தேவையை முன்னிட்டு சிறப்பு கூட்டங்கள் நடத்துதல்.

xi. வாரியத்திற்கான செலவினங்களை மேற்கொள்ள, வாரியத்திற்கென அரசு அங்கீகாரம் பெற்ற வங்கியில் / பாரத வங்கியில் தனியாக கணக்கு தொடங்குதல் வேண்டும்.

xii. வாரியக் கூட்டத்திற்கு வருகை தரும் உறுப்பினர்களுக்கு அரசு விதிமுறைகளின்படி நடைமுறையில் உள்ள பயணப்படியும் அமர்வுக்கட்டணத்தையும் உறுப்பினர்களுக்கு வழங்குதல்.

xiii. கைம்பெண்கள், ஆதரவற்ற மகளிர், மணமாகாத மகளிர் ஆகியோரின் நலனுக்காக கருத்தரங்குகள், கருத்துப்பட்டறைகள் நடத்தி புதிய நலத் திட்டங்களை உருவாக்குதல்.

xiv. அரசால் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் அவர்களுக்கு உரிய நேரத்தில் சென்றடைகிறதா என்பதை கண்டறிந்து உறுதி செய்தல்.

xv. நிதியினை முறையாக கையாளுதல் / குறித்த கல்வியறிவினை ஏற்படுத்துதல்.

(த.பி.பா)

xvi. சொத்துக்களை உரிய முறையில் பாதுகாப்பது குறித்த புரிதலை ஏற்படுத்துதல்.

xvii. சொத்துரிமை, குடும்ப வன்முறைகளிலிருந்து உரிய பாதுகாப்பு மற்றும் இதர இடர்பாடுகளிலிருந்து பாதுகாப்பதற்கு இலவச சட்ட உதவி மற்றும் ஏனைய உதவிகளையும் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் வாயிலாக எளிதாக பெறுவதற்கு வழிவகை செய்தல்.

xviii. ஒற்றை சாளரத்தின் கீழ் கைம்பெண்கள் / ஆதரவற்றோர் சேவைகளை ஒருங்கிணைந்து எளிதில் உதவி கிடைக்க வழிமுறை செய்தல்.

xix. சமூக பாதுகாப்பு / சுகாதார சேவைகள் / அணுகுவதை / கிடைப்பதை எளிதாக்குதல்.

xx. திறன் வளர்ப்பு பயிற்சி உள்ளிட்டவை மூலம் சமூக ஒருங்கிணைப்பு (ம) மறுவாழ்வினை ஏற்படுத்துதல்.

xxi. அரசு இல்லங்களில் தங்கி இருப்போரின் (உள்ளுறைவோரின்) உரிய பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கென நிதி ஒதுக்கீடு செய்தல்.

xxii. தொடர் கண்காணிப்பினை நெறிப்படுத்தி உறுதிபடுத்துதல்.

xxiii. கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிருக்காக 'உதவி மையம்' ஏற்படுத்துதல்.

xxiv. விதவைகள் / ஆதரவற்றோர்களுக்கான சிறப்பு பிரிவு உருவாக்குதல்.

xxv. தொடர்புடைய துறைகள், சட்டத்துறை உள்ளிட்ட அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பு அலுவலராக சிறப்பு அலுவலர் நியமனம் செய்தல்.

xxvi. கல்வி, சட்டம், தங்குவதற்கான இல்லங்கள், மனநல ஆலோசனை, வங்கி கணக்கு துவங்குதல் உள்ளிட்ட உதவிகள், திறன் வளர்ப்பு பயிற்சி, வருமானம் ஈட்டும் வகையிலான பயிற்சிகள் வழங்குதல்.

xxvii. வீடு / மனை பட்டா உதவி, தனியே இருப்பவர்களுக்கான இறுதி சடங்கு நிகழ்வு செலவுகள் ஆகியவற்றுடன் தேவைப்படும் அனைத்து பிற உதவிகளும் உரிய நேரத்தில் கிடைக்கச் செய்தல்.

xxviii. குறை தீர்க்கும் வழிமுறைகளை பின்பற்றி குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல்.

xxix. சமுதாயத்தில் கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட / ஆதரவற்ற கைம்பெண்கள் மற்றும் அவர்களை சார்ந்து இருக்கும் குழந்தைகளின் பாதுகாப்பு, நலம் உள்ளிட்டவற்றை உறுதி செய்தல்.

xxx. மாவட்ட வாரியாக கைம்பெண்களின் எண்ணிக்கை விவரங்களை பதிவேட்டில் பராமரித்தல்.

xxxi. கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களின் தேவைகளை நிறைவேற்றிட ஏதுவாக மாவட்ட வாரியாக விவரங்களை சேகரித்து அதனை உறுதி செய்தல்.

xxxii. தேவைப்படும் இதர நடவடிக்கைகளை காலத்திற்கேற்ப மேற்கொள்ளுதல்.

xxxiii. கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களின் குழந்தைகளுக்கு தொழிற் கல்வியினை உள்ளடக்கிய இலவச கல்வி வழங்க வழிவகை செய்தல்.

xxxiv. வருவாய் தரக்கூடிய வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல்.

xxxv. தேவைப்படும் இடங்களில் தொழில் பயிற்சியினை அளித்தல்.

xxxvi. ஆதரவற்ற கைம்பெண்கள் மறுமணம் புரிந்திருந்தால் வாரியத்தின் மூலம் வழங்கப்படும் நிதி உதவி தொகையினை நிறுத்துதல்.

xxxvii. கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தின் நோக்கம், துணை விதிகள், செயல்பாடு, பொறுப்பு, நடவடிக்கைகள் போன்றவை சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்தல்.

xxxviii. ஆண்டுக்கு ஒருமுறை இந்நலவாரியத்தின் கணக்குகளை பட்டயக் கணக்கர் மூலம் தணிக்கை செய்து அரசுக்கு அறிக்கையும் மற்றும் இவ்வாரியத்தின் செயல்பாடுகள் பற்றிய ஆண்டு அறிக்கையும் அரசுக்கு சமர்ப்பித்திட அனுமதித்தல்.

**ஷம்பு கல்லோலிகர்**
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஆர். எல். சுஜ்விதி 02/09/2022
பிரிவு அலுவலர்.